பாடம் 3

# அற்புதமான மீட்பு

***நீண்டதூரம் நீ பயணம் செய்ததுண்டா? எந்த இடத்திலிருந்து எந்த இடத்திற்குப் போகிறாய் என்று தெரிந்து பயணம் செய்திருக்கிறாயா? இன்று நாம் இஸ்ரவேலரது நீண்டதூரப் பயணம்பற்றிப் பார்ப்போமா?***

ஆட்டுக்குட்டியைக் கொன்று அதன் இரத்தத்தை நிலைகளில் பூசியதை இஸ்ரவேலர் நினைவுகூர்ந்தனர். இறைச்சி, புளிப்பில்லா அப்பம், கசப்பான கீரை ஆகிய வற்றை, அரையில் கச்சையைக் கட்டிக்கொண்டும் கையில் தடியைப் பிடித்துக்கொண்டும் கால்களில் பாதரட்சைகளை அணிந்துகொண்டும் புசித்ததையும் இஸ்ரவேலர் நினைத்துப் பார்த்தனர். பிரமிப்பாயிருந்தது அவர்களுக்கு. எகிப்தில் அது தான் அவர்கள் சாப்பிட்ட கடைசி உணவாகும்.



மேலும் இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்பட்ட அன்றைய இரவிலே தேவன் சொல்லியிருந்தபடியே எகிப்தியரின் தலைப்பிள்ளைகள் யாவரும் இறந்தனர். மிருகங்களின் தலையீற்றுகளும் இறந்தன. தன் பிள்ளை இறந்த மாத்திரத்தில் பார்வோன் அதிக கோபமும் வேதனையும் அடைந்தான்.

இராத்திரியிலே அவன் மோசேயையும் ஆரோனையும் அழைப்பித்தான். உங்கள் கர்த்தருக்கு ஆராதனைசெய்ய இஸ்ரவேலர் யாவரையும் கூட்டிச்செல்; ஆடு, மாடுகள் யாவையும் கொண்டு செல்லுங்கள் என்றான். இஸ்ரவேலர் கேட்ட யாவற்றையும் எகிப்தியர் கொடுத்தனர். எகிப்தை விட்டுவிரைவாகப் புறப்படுமாறு வேகமாக அவர்களை விரட்டினார்கள்.

ஏராளமான பொருட்களுடன் இஸ்ரவேலர் எகிப்திலிருந்து அந்த ராத்திரியிலேதானே புறப்பட்டார்கள். செங்கடல் வரையிலும் இரவில் அக்கினித் தூணாகவும் பகலில் மேகத்தூணாகவும்

## மனன வசனம்

**நீங்கள் நின்றுகொண்டு இன்றைக்கு கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்.**
**யாத்திராகமம் 14:13.**

முன்சென்றார் தேவன். இஸ்ரவேலர் இரவிலே இருளில் இடறாமலும், குளிரால் தாக்கப்படாமலும் இருந்தார்கள். அதேபோல் மேகஸ்தம்பத்தால் வெயிலின் வெப்பத்தால் பாதிக்கப்படாதிருந்தார்கள்.

தன் தலைப்பிள்ளையைச் சாகக்கொடுத்தும் பார்வோன் திருந்தவில்லை. இஸ்ரவேலர் நாட்டில் இல்லையென்றால், நம் நாட்டிலே வேலைசெய்ய அடிமைகள் இல்லாமல் ஆகிவிடுமே என நினைத்து, தன் இராணுவத்துடன் இஸ்ரவேலரைப் பின்தொடர்ந்தான்.

இஸ்ரவேலருக்குப் பின்னால் எகிப்தியரது இராணுவம்; இருபுறமும் மலைகள்; முன்னே செங்கடல். இஸ்ரவேலரது நிலை இக்கட்டானதாக இருந்தது. எனவே, அவர்கள் மிகவும் பயந்தார்கள். மோசேயைக் கோபத்துடன் முறைத்துப் பார்த்தார்கள். ‘‘எகிப்திலே சவக்குழிகள் இல்லையென்றா எங்களை இந்த வனாந்தரத்திலே சாகும்படி அழைத்துவந்தீர்; நாங்கள் இங்கே சாகிறதைப் பார்க்கிலும் எகிப்திலே அடிமைகளாயிருந்து வேலைசெய்வதே நலமானது’’ என்று மோசேயைத் திட்டினார்கள்.

அப்போது மோசே இஸ்ரவேலரைப் பார்த்து, ‘‘பயப்படாதிருங்கள்; நீங்கள் நின்றுகொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள். இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள். கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள்’’ என்றார். தேவன் சொன்னபடி, மோசே செங்கடலை நோக்கி தனது கோலை நீட்டினார். கடல் இரண்டாகப் பிரிந்தது; இஸ்ரவேலர்



## செய்தி

**என்னைப் பராமரிக்க**
**தேவன் ஒரு திட்டம் வைத்திருக்கிறார்.**

கடலின் நடுவே வெட்டாந்தரையில் நடந்து சென்றனர். மிகுந்த மகிழ்வுடன் இஸ்ரவேலர் வேக வேகமாகக் கடலைக் கடந்து சென்றனர்.

ஆனால், இஸ்ரவேலரை அழிக்கப் பின்னர் வந்த எகிப்தியரை, கடல் மூடிக்கொள்ளுமாறு தேவன் கட்டளையிட்டபடி, மோசே மீண்டும் கடலை நோக்கித் தன் கோலை நீட்டினார். அவ்வாறே எகிப்தியரின் இராணுவமும் இரதங்களும் கடலில் மூழ்கி மடிந்தன. இஸ்ரவேலர் ஆச்சரியப்பட்டார்கள். 'கர்த்தர் என் பெலனும் என் கீதமுமானவர்' என்று மோசேயுடன் சேர்ந்து இஸ்ரவேலர் யாவரும் தேவனைப் புகழ்ந்து பாடினர்.

என் கண்மணியே! உன் வாழ்க்கைப் பயணத்திலும் தேவனே உன்னை என்றும் வழிநடத்த ஜெபி.

*செய்முறை:* பாடத்தை நன்கு படி; பின்னர் கீழே கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகளில் உள்ள ஒவ்வோர் இரண்டாம் எழுத்தை வெட்டிவிட்டு, இஸ்ரவேலரது மீட்புக்கு உதவியாக இருந்தவற்றைக் கண்டுபிடி.

## புதிர் 3

1. அ ஆ க் இ கி ஈ னி உ த் ஊ தூ எ ண்
2. கா க ற் ங று
3. மே இ க யே த் சு தூ எ ண்
4. மோ இ சே ஸ் யி ஆ ன் ப் கோ பி ல்